பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 01 | ஞாயிற்றுக்கிழமை | 17.08.2025 | அதிர்வு 16

## யாழில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணம்



யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 04

## நல்லூர் ஆலயத்துக்கு வெடி குண்டு மிரட்டல்

### அநாமதேய தொலைபேசி அறிவிப்பால் சோதனை



(என்.புவியரசன்)

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வெடி குண்டு இருக்கின்றது என அநாமதேய தொலைபேசி அறிவிப்பு வந்ததால் அங்கு சோதனை நடவடிக்கை இடம்பெற்றது. 04

# ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் போட்டியிடுவேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமாயின் அப்போதும், தாமே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் சிறுபான்மைப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. 04

### தமிழர் தாயகத்தில் இராணுவ அடக்குமுறைக்கு எதிரான

# நாளைய ஹர்த்தாலுக்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்குங்கள்

### யாழ். மாநகர மேயர் வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும், அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம், இராணுவ அடக்குமுறை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை திங்கட்கிழமை வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர மேயர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா கேட்டுக் கொண்டுள்ளார். 04

# பருத்தித்துறையில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி ஒகஸ்ட் 25 ஆம் திகதி போராட்டம்



"பருத்தித்துறை நகரைப் பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில், பருத்தித்துறை நகரில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை நகர சபை மாநாட்டு மண்டபத்தில் பருத்தித்துறை நகர சபை தவிசாளர் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தப் போராட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பருத்தித்துறை துறைமுகப் பகுதி மற்றும் வெளிச்ச வீட்டடியில் அமைந்துள்ள 04




தமிழரசுக் கட்சி நாளை நடத்தவிருக்கும் ஒரு நாள் ஹர்த்தால் தென்னிலங்கையிலும் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்த ஹர்த்தாலை முன்னின்று நடத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு நேற்று முன்தினம் காலையில் ஓர் அழைப்பு. நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவிடமிருந்து வந்தது.

"இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். அப்படி இருக்க எதற்காக இந்த ஹர்த்தால்?" என்று உரிமையுடன் சுமந்திரனிடம் கோபித்துக் கொள்வது போல மென்மையாகக் கேட்டாராம் ஜனாதிபதி.

"அந்தச் சம்பவத்திற்கான தனி நடவடிக்கை அல்ல இது. மக்கள் நெருக்கமாக இருக்கின்ற இடங்களில் எல்லாம் அதிக அளவில் இராணுவப் பிரசன்னம் தேவையற்றது. இத்தகைய அளவுக்கு மீறிய இராணுவப் பிரசன்னத்தால் ஏற்படும் 06


# பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிகளில் வெற்றிடங்கள்

பிரியந்த வீரசூரிய போலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டதன் மூலம், அவர் வகித்து வந்த சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியும், நிலந்த ஜயவர்தன வகித்து வந்த சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியும் தற்போது வெற்றிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பதவிகளுக்கும் நியமிக்கப்பட உள்ள இரண்டு சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களும் தற்போது இலங்கை காவல்துறையில் உள்ள சுமார் 50 சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர்களில் மிகவும் சிரேஸ்ட பிரதி காவல்துறை மா அதிபர்களாக உள்ளனர்.

அதன்படி, சிறிது காலம் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் தற்போது பொலிஸ் தலைமையக நிர்வாக பிரதி காவல்துறை மா அதிபர் மற்றும் வடமத்திய மாகாண சிரேஸ்ட பிரதிபொலிஸ் மா அதிபர் ஆகியோரின் பணிகளை மேற்கொள்ளும் புத்திக சிறிவர்தனவும் அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சிரேஸ்ட பிரதி காவல்துறை மா அதிபர் தம்மிக்க பிரியந்தவும் இந்த இரண்டு வெற்றிடமான பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர், தொடர்புடைய பரிந்துரைகளை அடுத்த திங்கட்கிழமைக்குள் தேசிய காவல் ஆணைக்



குழுவுக்கு அனுப்புவார் என்று காவல்துறை தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 25 பவுண் நகையை வாங்கி ஏமாற்றிய நண்பி! தவறான முடிவெடுத்து குடும்பப் பெண் சாவு!!



நண்பியிடம் 25 பவுண் நகையைக் கொடுத்து ஏமாந்த குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

பண்டத்தரிப்பு – சில்லாலை பகுதியைச் சேர்ந்த றொபேட் ராஜ்குமார் ஆன் சுகாசினி (வயது 43) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே நேற்று சனிக்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண்ணின் நண்பி ஒருவர் தனது மகனின் திருமணத்துக்குச் செலவழிப்பதற்குப் பணம் தேவைப்படுவதால் அடகு வைப்பதற்கு என 25 பவுண் நகையை அந்தப் பெண்ணிடம் வாங்கியுள்ளார். இருப்பினும் அவர் அந்த நகையைத் திருப்பிக் கொடுக்காமல் தொடர்ச்சியாக அந்தப் பெண்ணை ஏமாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் அந்த நகையை நண்பியிடம் மேற்படி கேட்டுள்ளார். அவர் அந்த நகையை வழங்க மறுக்க மனவிரக்தியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். இளவாலைப் பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.



# 400 உப்பு கொள்கலன்களினை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 400 உப்பு கொள்கலன்களை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப் படுமென இலங்கை சுங்கம் தெரிவிக்கின்றது.

உப்பு இறக்குமதிக்கு அரசாங்கம் வழங்கிய கால அவகாசத்திற்கு பின்னர் இந்த உப்பு கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் அது தடுத்துவைக்கப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

உப்பு இறக்குமதிக்கு கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி வரை அரசாங்கம் காலஅவகாசம் வழங்கியிருந்தது.

இறக்குமதியாளர்கள் தாமதக் கட்டணத்தை செலுத்தி கொள்கலன்களை தொடர்ந்தும் துறைமுகத்தில் வைத்திருப்பதாகவும் சுங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஜூலை மாத வருவாயில் சாதனை படைத்த சுங்கம்




ஜூலை மாதத்தில் இலங்கை சுங்கம் 235 பில்லியன் ரூபாய்களை மாதாந்த வருவாயாக வசூலித்து சாதனை படைத்துள்ளது என சுங்கப் பணிப்பாளர் நாயகம் சுனில் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய சுங்கப் பதிவு மற்றும் அறிவிப்பு முறையை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு, இதனை தெரிவித்த அவர், இது இதுவரை இல்லாத அளவுக்கு ஈட்டப்பட்ட மாதாந்த வருவாயாகும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த சாதனை ஒரு வரலாற்று மைல்கல் என்றும், 2023 ஆம் ஆண்டில் ஒரு மாதத்தில் 100 பில்லியன் ரூபாய்களை பெறுவதுகூட ஒரு பெரிய சாதனையாகக் கருதப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

வாகன இறக்குமதி இந்த சாதனை வருவாயில் மிகப்பெரிய பங்கை அளித்துள்ளது.

தற்போதைய புதிய அமைப்பு, இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான வசதியை மேம்படுத்தும் எனவும், சுங்கத்தின் செயல் திறனை மேலும் அதிகரிக்கும் என்றும் சுனில் நோனிஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளைவுகளில் ஒன்றுதான் அந்த மரணம். யுத்தம் முடிந்து விட்ட பின்னணியில் மக்கள் மத்தியில் இராணுவப் பிரசன்னம் அதிகமாக இருப்பது அகற்றப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தப் போராட்டம். முன்னர் இதே காரணத்திற்காக நாங்கள் வலியுறுத்தி போராடிய போது, அதை ஆதரித்தவர் நீங்கள். குடிமக்கள் மத்தியில் அதிகமாக இராணுவம் குவிக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதுதான் உங்களின் கருத்தாகவும் இருந்தது. ஆனால் அந்தப் படைக் குவிப்பு நிலைமையில் நீங்கள் அதிகாரத்துக்கு வந்தும் மாற்றம் வரவில்லை. அதனால் எங்கள் போராட்டம் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது." என்றார் சுமந்திரன்.

"மக்களுக்கு மத்தியில் செறிவாக இராணுவம் இருக்கத் தேவை இல்லை என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. அந்த இளைஞர் மரணமான பகுதியிலிருந்து இராணுவத்தை நாங்கள் விலக்குகிறோம். அதே போன்று பிற இடங்களிலும் செய்வோம். அதற்கு முன்னர் ஏன் அவசரப்பட்டு இந்த நடவடிக்கை?" – என்று ஜனாதிபதி கேட்டார்.

"நல்லது. நீங்கள் அப்படி இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து, இராணுவத்தை விலக்கும் போது அதற்கு நாங்கள் அச்சமயத்தில் சாதகமாகப் பிரதிபலிப்புக் காட்டுவோம். இப்போது அந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் மெத்தன நிலையே தொடர்கின்றது. ஆகவே எங்கள் போராட்டமும் தவிர்க்க முடியாதது." – என்றார் சுமந்திரன்.

இருவருக்கும் இடையேயான பழமையான நல்லுறவு நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைபேசி பேச்சிலும் உறுதியாகத் தொடர்ந்தது.

இந்த ஹர்த்தால் போராட்டம் தொடர்பாக தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களும் தத்தமது பிரதேசங்களில் காத்திரமான பிரசார முன்னெடுப்புகளையும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் தலைமை சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தொடர்பு கொண்டு கோரியியிருந்தது.

அனேகமாக எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் இவ்விடயத்தில் தங்களால் இயன்ற அளவிலும் முயற்சி எடுத்து வருகிறார்கள். ஆயினும் ஒரு சில எம். பிக்கள் கடைசி நேரம் வரை ஒன்றும் செய்யாமல் பம்மிக் கொண்டிருப்பது கட்சித் தலைமைக்கு விசனத்தைத் தந்திருப்பதாகத் தெரிகிறது. ஹர்த்தால் முடிந்த பின்னர்தான் பிரேத பரிசோதனை போல அதன் பெறுபேறுகள் ஆராயப்படும். அப்போது உறுப்பினர்களின் பங்களிப்பு குறித்து தமிழரசு தீர்மானிக்கும் எனத் தெரிகிறது.

மற்றைய தமிழ் கட்சிகளைப் பொறுத்த வரை தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளை வாரி விடுவதை மட்டுமே தன் ஒரே அரசியலாகக் கடந்த 75 ஆண்டுகளாகக் கொண்டிருக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இந்த போராட்டம் குறித்து – அதுவும் இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான வடக்கு, கிழக்கு தழுவிய போராட்டம் குறித்து – மௌனம் பேணுகிறது. அதன் இலக்கும் நோக்கும் யாது என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான புளொட்டைச் சேர்ந்த வவுனியா மாநகரசபை முதல்வர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். அதே போல வவுனியா துணை முதல்வரும் போராட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்க முன் வந்துள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர்கள் இன்று காலை 10 மணியளவில் இணைய வழியில் ஒன்று கூடிப் பேசவிருக்கிறார்கள். அப்போது ஹர்த்தால் தொடர்பாக சங்குக் கூட்டணியின் நிலைப்பாடு குறித்தும் அவர்கள் தீர்மானிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹர்த்தாலுக்கு முஸ்லிம் தரப்பும் ஆதரவு தந்து இருப்பதால் கிழக்கில் அதன் தாக்கம் தீவிரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே வடக்கு மாகாணப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் தொடங்கியுள்ளது. அது நேற்று முதல் 5 நாள்கள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகி உள்ளது. ஹர்த்தாலுக்கு மத்தியில் நாளைக்கு மெய்வன்மை நிகழ்ச்சிகளின் போக்கு எப்படி இருக்கும் என்பது தெரியவில்லை.

இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் ஹர்த்தால் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்க போய் நமக்கேன் சிக்கல் என்று மெய்வன்மைப்போட்டியை ஏற்பாடு செய்துள்ள அதிகார வட்டாரங்கள் கருதுவது தெரிகின்றது. ஆளுநரிலிருந்து அதிகாரிகள் வரை தற்றுணிபு அதிகம் இல்லாத நிலையில், இது விடயத்தில் முடிவெடுக்க இயலாமல் தவிர்த்து, தப்பித்துக் கொள்ளவே ஈடுபாடு காட்டுவார்கள் என்பதை ஊகிக்க முடிகிறது.

பாவம் – பாடசாலை மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மெய்வல்லுநர்கள்....!

## நல்லூர் ஆலயத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் இடம்பெற்று வரும் நிலையில் ஆலயத்தில் வெடிகுண்டு இருக்கின்றது என அநாமதேய தொலைபேசி அறிவிப்பு வந்ததால் நேற்று அங்கு சிறிது நேரம் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

காலையில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் சகிதம் சோதனையில் ஈடுபட்டு எந்தவிதமான ஆபத்தை ஏற்படுத்தும் வெடிபொருள்களும் இல்லை எனபதனை உறுதி செய்தனர்.

சோதனைகளைத் தொடர்ந்து எந்த வித தடைகளும் இன்றி வழமை போன்று நேற்றைய உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

## நாளைய ஹர்த்தாலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர் தாயகமாக வடக்கு – கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம் காணப்படுகின்றது. இதை எதிர்த்து தமிழர் தாயகத்தில் நாளை திங்கட்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எமது தமிழர் பிரதேசங்களில் இராணுவ அடக்குமுறைகள் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். தமிழர் நிலங்களில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும், அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம், இராணுவ அடக்குமுறை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை திங்கட்கிழமை வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டணியின் எதிர்கால அரசியல் திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இதன்படி, மீண்டுமொரு தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்னர் பரந்துபட்ட எதிர்க்கட்சி கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டும் எனக் குறித்த பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்திக்குள் நிலவுவதாகக் கூறப்படும் முறுகல்கள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது கருத்துரைத்த சஜித் பிரேமதாஸ பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்பட்டாலும் அது தம்முடைய எதிர்க்கட்சி கூட்டணியுடன் இணைந்ததாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமாயின் அப்போதும், தாமே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கப்போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழில் மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கரத்தை – துணவி பகுதியைச் சேர்ந்த அருள்ஜீவன் பிரசாத் (வயது 18) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மேற்படி இளைஞர் ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வாகன சேவிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றார். பணிபுரியும்போது அவர் மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

இவ்வாறு மின்சாரம் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது குறித்து விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி பொது அமைப்புகளை ஒன்றிணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்துக்குச் சொந்தமான நிலம் மற்றும் தபால் நிலையத்துக்குச் சொந்தமான கட்டடம் என்பவற்றை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் பெரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், தபால் நிலையம் பிறிதொரு கட்டடத்தில் இயங்கி வருவதுடன் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை பருத்தித்துறை நகருக்கு வெளியே இடம்மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால், பருத்தித்துறை நகரின் முக்கிய அடையாளங்களான நீதிமன்றம், தபால் நிலையம், வெளிச்சவீடு ஆகியவற்றை அந்த அந்த இடங்களிலேயே உறுதிப்படுத்தும் வகையிலும், குறித்த பகுதிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றுமாறு கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

உலக சந்தைக்கு ஏற்ற வகையில் உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பா, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு உலர் மீன்களை ஏற்றுமதி செய்ய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு தெரிவித்தது.

ஏற்றுமதிக்கான உலர் மீன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக நவீன தொழில்நுட்பம், உபகரணங்கள் மற்றும் நிதி வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




தொ பத்திநாதனின் நூல்கள் ஒரு ஆய்வு:



தமிழகத்தில் வாழும்
ஈழத்து அகதிகள் இலங்கைத்
தமிழர்களின் இனப்பரம்பலை
மாற்றியமைக்கும்
துருப்புச் சீட்டு அல்ல !



போரின் மறுபக்கம்
- தன்வரலாறு
- திரு ப. தயாளன.
(ஆசிரியர், எழுத்தாளர்)



தமிழகத்தின் ஈழ அகதிகள்
- கட்டுரை
- திரு தனுஜன்
(கலாசார உத்தியோகத்தர்)



தகிப்பின் வாழ்வு
- கட்டுரை
- திரு. பெ. கணேசன்
(ஓய்வுநிலை அதிபர், எழுத்தாளர்)



அந்தரம்
- நாவல்
- வண சிவஞானம் யோசுவா
(இயக்குனர், காவேரி கலா மன்றம், எழுத்தாளர்)

காலம் :
9:30 am @
17th August 25

லிற்றில் எய்ட் மண்டபம், கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி !



# இரவு நேரத்தில் ஒளிரும் ஸ்டிக்கர்கள் யாழில் சைக்கிள்களில் ஒட்டப்பட்டன

இரவு நேரத்தில் ஒளிரும் ஸ்டிக்கர்கள் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து சைக்கிள்களுக்கு ஒட்டப்பட்டன.

“தூய்மையான இலங்கை“ வேலைத் திட்டத்தின் கீழ் விபத்துக்களை குறைக்கும் வகையில் ஜனாதிபதி செயலகம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பில் இந்த வேலைத் திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், தூய்மை இலங்கைத் திட்டப் பணிப்பாளர் தசூன் உதார, தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன், போக்குவரத்துப் பிரிவு உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜேசுதாஸன் உள்ளிட்ட பலரும் இதன்போது பங்கேற்று சைக்கிள்களுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டினர்.

தூய்மை இலங்கை திட்டத்தை தெளிவுபடுத்தும் துண்டுப்பிரசுரங்களும் இதன்போது பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆஸியின் சுரண்டல் போக்கு

கற்றறிந்த புத்திஜீவிகள், நிபுணத்துவத் தரம்மிக்கோர், உயர் பயிற்சி பெற்றோர் நாட்டை விட்டு பெரும் எண்ணிக்கையில் வெளியேறி வருகின்றமையால் நாடு எதிர்கொள்ளும் பின்னடைவு குறித்து இப்பத்தியில் தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறோம்.

முக்கியமாக மருத்துவ - சுகாதாரத் துறையில் இந்த மூளை வடிகால் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது பற்றி குறிப்பிட்டு இருந்தோம்.

இப்போது இலங்கை மின்சார சபையும் இதே போன்ற நெருக்கடியினால் பாதிக்கப்படுவது பற்றிய செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இலங்கை மின்சார சபையில் பணியாற்றிய பொறியியலாளர்களில் இருபது வீதமானோர் அண்மைய ஆண்டுகளில் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகளுடன் கூடிய இலாபகரமான பதவிகளைப் பெறுவதற்காக வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ளனர் என மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் எம்.எச்.தம்மிகே விமலரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், 226 பொறியாளர்கள் - அதாவது மின்சாரத் திணைக்களத்தின் பணியாளர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் - நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர்களில், 85 வீதமானோர் மின் பொறியியலாளர்கள். எட்டு வீதமானோர் இயந்திரப் பொறியியலாளர்கள். ஏழு வீதமானோர் சிவில் பொறியியலாளர்கள் பெரும்பாலானோர் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து போன்ற நாடுகளில் உயர் பதவிகளுக்காக இவ்வாறு குடிபெயர்ந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

"மனநோய் மருத்துவர்களுக்கான பற்றாக்குறை ஆஸ்திரேலியாவில் தீர்க்கப்படும் வரை இலங்கையில் மனநோய் மருத்துவர்களுக்கான நெருக்கடி தொடர்ந்து நீடிக்கும்" என்று மனநோய் மருத்துவர்கள் கட்டமைப்பின் தலைவர் அண்மையில் பொது நிகழ்வு ஒன்றில் குறிப்பிட்டிருந்தமையை இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம். அவ்வளவு தூரம் கற்றறிந்தோர் ஏற்றுமதி அந்த நாட்டுக்கு நடந்து கொண்டிருக்கின்றது.

இலங்கை போன்ற நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக அல்லது சட்ட ரீதியான முறைமை அல்லாமல் தங்கள் நாட்டுக்குள் வரும் அகதிகளைத் துரத்தி அடிப்பதிலும், கடலில் வைத்தே அவர்களைக் கலைத்து விடுவதிலும் கங்கணம் கட்டி, தீவிரம் காட்டும் ஆஸ்திரேலியா, மறுபுறத்தில் இலங்கையில் நாட்டின் உதவி திட்டத்தின் கீழ் படித்து, இங்கு தரம் பெற்ற மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் தூண்டில் போட்டு, பணத்தாசைகாட்டி, வசதிகள் கொடுத்து, கொழுவி இழுத்து, வாரி அள்ளுகின்றது.

அந்த நாடு தனது நலனை மாத்திரம் முன்னிறுத்தி, வசதி, வாய்ப்புகள், நிதியைக் காட்டி, நமது நாட்டின் மூளை வளத்தை சூறையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு விடயமாக இது மாறி வருகிறது.

இலங்கையில் இருந்து அகதிகள் என்ற போர்வையில் பெரும் எண்ணிக்கையானோர் தமது நாட்டுக்குள் படையெடுத்த போது, அதைத் தடுப்பதற்கு இலங்கை அரசோடு ராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்து, நமது நாட்டுக்கு வந்து இருந்தே அதனைத் தடை செய்வதற்கான முன் முயற்சிகளை எடுத்த ஆஸ்திரேலியா, மறுபுறத்தில் நமது நிபுணத்துவ தரத்தை வடிகால் போட்டு வடித்து அள்ளிச் செல்கின்றது. அதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை நேரடியாக ராஜதந்திர ரீதியில் ஆஸ்திரேலியாவோடு முன்னெடுப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகி வருகின்றது.

நமது நாட்டில் இருந்து வரக்கூடிய அகதிகளை துரத்தியடிக்கும் ஆஸ்திரேலியா, நமது நிபுணத்துவ பலத்தை - வளத்தை மாத்திரம் பணத்தைக் காட்டி, வசதிகளைக் கொடுத்து சுரண்டி அள்ளிக் கொண்டிருக்கின்றது. இது அனுமதிக்க முடியாத - அனுமதிக்கக் கூடாத - ஒரு போக்காகும்.

ஆஸி மட்டுமல்ல, பிரிட்டன் போன்ற பல மேற்கு நாடுகளும் இதில் விதிவிலக்கல்ல.













# முல்லையில் பெண் சாதனையாளர்களுக்கு அரியாத்தை விருது, பாராட்டுப் பத்திரங்கள்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மண்ணுக்குச் சொந்தமான பெண்கள் உலகத்தின் ஏனைய சரித்திர நாயகிகளுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்களல்லர் என்பதை “ஆனையை அடக்கிய அரியாத்தை” என்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுளமுனைக் கிராமத்தில் வாழ்ந்த வீரப் பெண்மணியின் வரலாறு உணர்த்துகிறது. அத்தகைய வீரப்பெண்மணியின் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு அரியாத்தை விருது மற்றும் பாராட்டுதல்கள் நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்ட செயலகத்தின் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பிரதம அதிதியாகவும்,வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் கௌரவ அதிதியாகவும், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் கிறிசலிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி அஷிகா குணசேன ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் இவ்விருது வழங்கும் நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சி.குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் சற்குணேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், நிர்வாக அலுவலர், சட்டத்தரணி தனஞ்சயன், வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையப் பணிப்பாளர் பிரதீபன், பிரதேச சபை செயலாளர், கிறிசலீஸ் நிறுவன அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்திக்கான உலகளாவிய வளர்ச்சி இலக்குகளில் ஓர் இலக்கான பாலின சமத்துவம் அடைதல் மற்றும் அனைத்துப் பெண்கள், சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தலும் என்ற நோக்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் வினைத்திறனுடன் அடைந்து கொள்வதற்கான பல்வேறு செயற்பாடுகளில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளரை அரியாத்தை விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தது. இவ்விருது வழங்கலிற்கு கிறிசலிஸ் நிறுவனம் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

சாதனைகளைச் சரித்திரங்களாக்கி பேதைகள் அல்ல மேதைகள் என சாதித்து நிற்கின்ற 6 பெண் ஆளுமைகளுக்கு –

- பெண் வாழ்நாள் சாதனையாளர்
- ஆண்டின் சிறந்த பெண் தலைமைத்துவம்
- ஆண்டின் சிறந்த பெண் தொழில்முனைவோர்
- ஆண்டின் சிறந்த பெண் சமூக சேவகர்
- ஆண்டின் சிறந்த இளம் பெண் தொழில்முனைவோர்

என்பவற்றிற்கான அரியாத்தை விருதும் அதே போல் ஆண்டின் சிறந்த பெண் தொழில் முனைவோரில் ஒருவராக, ஆண்டின் சிறந்த அரசியலில் ஈடுபடும் பெண் தலைவர்களில் ஒருவராக மற்றும் ஆண்டின் சிறந்த பெண் சமூக சேவகருள் ஒருவராக என 36 பெண் ஆளுமைகளிற்கு அவர்களது சாதனைகளை அங்கீகரித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இன்று விருது பெற்றோர் விவரம்

1.பெண் வாழ்நாள் சாதனையாளர் விருது (Women Lifetime Achievement Award):

70 வயது கடந்தும் தடகளப் போட்டிகளில் சர்வதேச ரீதியில் விளையாட்டில் சாதனை படைத்து நாட்டிற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையினை சேர்ந்த இலங்கையில் சாதனை மங்கை திருமதி. ஸ்ரீசெயானந்தபவன் அகிலத்திருநாயகிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் பெண் வாழ்நாள் சாதனையாருக்கான “அரியாத்தை விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2.சிறந்த பெண் தலைமைத்துவ விருது (Outstanding Women Leadership Award):

தனது கல்வியறிவாலும் முயற்சியாலும் வளர்சி பெற்று கல்வி நிர்வாக சேவையில் சிறந்த நிர்வாகியாக இனங்காணப்பட்டு இலங்கையின் முதல் தமிழ் பேசும் பரீட்சை ஆணையாளராக பதவி உயர்வு பெற்ற முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி. மைக்கல் திலகராஜா ஜீவராணி புனிதாவுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் சிறந்த பெண் தலைமைத்துவத்திற்கான

தொடர்ச்சி▼


















# முல்லையில் பெண் சாதனையாளர்களுக்கு அரியாத்தை விருது, பாராட்டுப் பத்திரங்கள்

தொடர்ச்சி▲

"அரியாத்தை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது..

3.ஆண்டின் சிறந்த பெண் தொழில்முனைவோர் விருது (Woman Entrepreneur of the Year Award):

தனது 15 வயதில் இருந்து தையல் தொழிலைக் கற்று தையல்சார் பயிற்சிகள் மற்றும் ஆடை வடிவமைப்பு போன்றவற்றில் சிறந்த முன் மாதிரியான தொழில்முனைபவராக வளர்சியடைந்துள்ளது, சமூக சேவைகளிலும் ஈடுபடும் மாற்றுத்திறனாளியான முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் உயிலங்குளத்தைச் சேர்ந்த திருமதி.சத்தியானந்தம் சோபனாவுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான "அரியாத்தை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

4.ஆண்டின் சிறந்த பெண் சமூக சேவகர் விருது (Woman Social Worker of the Year Award ):

பால்நிலை மற்றும் சிறுவர்கள், பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை இனங்கண்டு தீர்த்து வைத்தலில் சிறப்பாக ஈடுபடுவதுடன் மாந்தை கிழக்கு மத்தியஸ்தர் சபையில் பெண் தவிசாளராக, சமாதான நீதவானாக, குடிசார் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக உறுப்பினராக, சிகரம் கல்வி நிலையத்தின் பதிவாளராக எனப் பொது அமைப்புகளில் சிறப்புற செயற்படும் மாந்தை கிழக்கு பாண்டியன்குளம், நட்டாங்கண்டலைச், சேர்ந்த திருமதி.விக்னேஸ்வரன் ஜெகதாம்பிகைக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் சிறந்த பெண் சமூக சேவகருக்கான "அரியாத்தை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

5.ஆண்டின் சிறந்த பெண் மாற்றத்தை ஏற்படுத்துபவர் விருது (Woman Changemaker of the Year Award):

செய்யும் தொழிலே தெய்வம் என்பதை நிரூபிக்கும் வகையிலும் ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதனையும் தனது வெல்டிங் தொழில் முயற்சியின் மூலம் நிரூபித்துள்ள வெலிஓயா, ஹெலம்பவெவ ஜனகபுரவைச் சேர்ந்த திருமதி.வலிசிகே கொண்டச்சரிலாகே ஷிராணி விமல சேனவுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் சிறந்த பெண் மாற்றத்தை ஏற்படுத்துபவருக்கான "அரியாத்தை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

6.ஆண்டின் சிறந்த இளம் பெண் தொழில்முனைவோர் விருது (Young Woman Entrepreneur of the Year Award):

பல்கலைகழக கல்வியின் அறிமுகத்துடன் தொழிலுக்கு ஏற்ற வகையில் களிமண் ஆபரண முறையினை (Terracotta Jewellery) சுயமாக தேடி கற்றுக்கொண்டு இலங்கையில் களிமண் ஆபரணங்களின் விற்பனையை விரிவுபடுத்தி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தலில் ஈடுபடுவதுடன் பெண்களுக்கு தொழில் வாய்ப்பளித்தலில் முன்னுரிமையளிக்கும் ஒட்டுசுட்டான் முத்துவிநாயகபுரத்தை சேர்ந்த திருமதி.கிருசாந் மிதுசாவுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் சிறந்த இளம் பெண் தொழில் முனைவோருக்கான "அரியாத்தை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.







# ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்கக் கோருகிறார் ரவிகரன் எம்.பி.




(பா.சதீசன்)

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் அதிகரித்துள்ள்இராணுவப் பிரசன்னத்திற்கு எதிராக எதிர்வரும் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இராணுவப் பிரசன்னமற்ற சுதந்திரமான வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் வேண்டுமென்ற எமது அடிப்படை மனித உரிமைக் கோரிக்கையை சர்வதேச மட்டத்தில் ஓங்கி ஒலிக்கச்செய்வதற்காக அனைவரும் இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள முத்துஐயன்கட்டு இடதுகரை ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் கடந்த 07.08.2025அன்று, முத்துஐயன்கட்டு பகுதியிலுள்ள 63ஆவது இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் அழைக்கப்பட்டு மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின்8 தாக்குதல் சம்பவத்தையடுத்து, இராணுவமுகாமிற்குச் சென்ற ஐவரில் ஒருவரான 32வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் காணாமல் போயிருந்தார்.

அவர் கடந்த 09.08.2025அன்று முத்துஐயன்கட்டுக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற விசாரணைகளையடுத்து, கடந்த 09.08.2025அன்று மேஜர் தரத்திலான இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து இராணுவத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.அச்சமயம் இரு இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டனர். மூன்று இராணுவத்தினர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் இந்தத் தாக்குதல் சம்பவம் மற்றும் அதன்பின்னர் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல்போய் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஆகியவற்றின் பின்னணியில் இராணுவத்தின் முறையற்ற செயற்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மிதமிஞ்சிய இராணுவமயமாக்கமுமே காரணமாக அமைந்துள்ளன.

குறிப்பாக இராணுவத்தினர் தேவையற்ற விதத்தில் அப்பகுதி இளைஞர்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவந்துள்ளனர். அத்தோடு அப்பகுதி மக்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி இளைஞர்களை முறைகேடான, சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இராணுவத்தினர் தூண்டிவிட்டுள்ளமையுடன், சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

அந்தவகையில் இராணுவத்தினரால் அப்பகுதி இளைஞர்களுக்கு இராணுவ முகாமிலுள்ள பொருழ்ல்கள், தளபாடங்கள், எரிபொருள் என்பவற்றுடன் இராணுவத்தினரால் காட்டுமிருகங்கள் வேட்டையாடப்பட்டு இப்பகுதி இளைஞர்களிடம் விற்பனைக்காக வழங்கப்பட்டு வந்ததன எனவும் அப்பகுதி மக்களாலேயே எமக்கு முறையிடப்பட்டது. இவ்வாறு இளைஞர்களுக்கு வழங்கப்படும் பொருழ்ல்களுக்கு மாற்றீடாக போதைப்பொருள்களைப் பெற்றுத்தருமாறு 63ஆவது இராணுவமுகாம் இராணுவத்தினர் அப்பகுதி இளைஞர்களைத் தூண்டிவிட்டுள்ளனர்.

இவ்வாறாக இராணுவத்தினரின் முறையற்ற செயற்பாடுகள், தொடர்பாடல்களின் பின்னணியிலேயே இந்த தாக்குதல் சம்பவமும் அதன்பின்னர் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் பதிவாகியிருக்கின்றன. இவ்வாறாக அப்பகுதி இளைஞர்களுடன் முறையற்றவிதத்தில் தொடர்பினைப் பேணிவந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இராணுவத்தினர் மூவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. ஆகவே இந்தச் சம்பவத்திற்கு இராணுவத்தினரே முற்றுமுழுதான பொறுப்பாளிகளாகக் காணப்படுகின்றனர்.

மேலும் அதிகரித்த இராணுவப் பிரசன்னமென்பது முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமின்றி வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பரப்பெங்கும் அதிகரித்துள்ள நிலையே காணப்படுகின்றது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 16ஆண்டுகளாகியுள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் இவ்வாறான அதிகரித்த இராணுவப் பிரசன்னம் தேவையற்ற ஒன்றாகும். அதனை ஒருபோதும் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அதேவேளை இவ்வாறு இராணுவப் பிரசன்னம் அதிகரித்திருப்பதன் பின்னணியில் இடம்பெறக்கூடிய கொடூரமான சம்பவங்களையும் தொடர்ந்தும் எம்மால் அனுமதிக்க முடியாது.

எனவேதான் வடக்கு, கிழக்கில் இவ்வாறு அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்திற்கு எதிராக நாளை திங்கட்கிழமையன்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் தழுவியரீதியில் பூரணகர்த்தாலுக்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அழைப்புவிடுத்துள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் எனக்கு பொறுப்பளிக்கப்பட்டவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் ஹர்த்தாலுக்கான ஆதரவைநல்குமாறு கோரியுள்ளேன்.

அதேவேளை வன்னி மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிஎன்ற வகையில் வன்னியிலுள்ள அனைத்துத் தரப்பினரும் இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பரப்பிலுள்ள அனைவரும் இந்த பூரண ஹற்த்தாலுக்கு ஆதரவு நல்கி வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்திற்கு எதிராக எமது முழுமூச்சான எதிர்ப்பினை காண்பிக்குமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்புவிடுக்கின்றேன்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 16ஆண்டுகள் ஆகியுள்ள சூழலில் வடக்கு,கிழக்கில் தொடர்ந்தும் இராணுவக் கெடுபிடிக்குள் எமது மக்களை வைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

வடக்கு, கிழக்கு தமிழர்தாயகத்திலுள்ள எமது மக்கள் வீட்டுக்காவலில் உள்ள குற்றவாளிகளைப்போல தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பில், அதிகரித்த இராணுவ பிரசன்னத்திற்கு மத்தியில் ஓர் அவல வாழ்வினையே வாழ்கின்றார்கள்.

எனவே வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப்பரப்பிலுள்ள எமது மக்கள் நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள மக்களைப்போல இராணுவப் பிரசன்னமில்லாது சுதந்திரமாக வாழவேண்டுமென்ற அடிப்படை மனித உரிமையினையே நாங்கள் கோருகின்றோம். அதற்காகவே இந்த வடக்கு, கிழக்க. ரீதியிலான பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர்மாதம் 08ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எனவே எதிர்வரும் 18.08.2025அன்று இடம்பெறவுள்ள வடக்கு, கிழக்குத்தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் முழு ஆதரவினை நல்குவதன் ஊடாக, வடக்கு கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்ற எமது அடிப்படை மனித உரிமைக் கோரிக்கையினை முழுசர்வதேசத்திற்கும் வலுவாக முன்வைப்போம். - என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# திருமலையில் ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி களத்தில் முழுமூச்சாக ஓரணியில் தமிழரசு!

(எஸ்.கீதபொன்கலன்)

கதவடைப்பு மற்றும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுரம் விநியோகிப்பு

வடக்கு கிழக்கில் அதிகரித்துவரும் காணி அபகரிப்பு மற்றும் இராணுவ பிரசன்னத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை திங்கட்கிழமை தமிழரசுக் கட்சியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கடையடைப்பு மற்றும் ஹர்த்தாலுக்கு தமிழ் பேசும் மக்களின் ஆதரவைக்கோரி நேற்று திருகோணமலை மூன்றாம் கட்டைச் சந்திப் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், நகரசபை முதல்வர் க.செல்வராஜா, பட்டணமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் வெ.சுரோஸ்குமார் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.பசீர் உள்ளிட்டோர் பங்குகொண்டு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து கடை உரிமையாளர்களின் ஆதரவைக் கோரியிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் விடுக்கப்பட்டுள்ள கடையடைப்பு மற்றும் ஹர்த்தாலுக்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைமைகளும் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் தமது பூரண ஆதரவை வழங்கி எதிர்வரும் திங்கட்கிழமை முழுமையான கதவடைப்புக்கும் ஹர்த்தாலுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும், வர்த்தக சங்கங்கள், மீனவ சங்கங்கள், முச்சக்கரவண்டி சங்கங்கள் உள்ளிட்ட பல சங்கங்கள் இதற்கு ஆதரவு வழங்கவுள்ளன எனவும் திருகோணமலை மாநகர சபை முதல்வர், பட்டணமும் பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

அதேபோன்று இந்த அரசிலும் வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், படுகொலைகளுக்கு எதிராக தமிழரசுக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கதவைடைப்பு மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைமை பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ள நிலையில் வடகிழக்கில் உள்ள அனைத்து முஸ்லீம்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியினுடைய பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர் அப்துல் லதீப் முகமட் பசீர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

















# தேசியவீரன் பண்டாரவன்னியன் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவில் மாவட்ட சதுரங்கச் சுற்றுப்போட்டி

## வடக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியம், முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கச் சங்கம் ஆகியவை இணைந்து முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களின் ஆளுமைத் திறனை வெளிக்கொணரும் வகையிலும் சதுரங்க திறமையை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கிலும் தேசியவீரன் பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க போட்டி இவ் ஆண்டு முதல் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்தடவையாக தேசியவீரன் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான சதுரங்க போட்டி நேற்றும் இன்றும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெறுகின்றது.

நேற்றையதினம் மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகிய தொடக்க நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பிரதம அதிதியாகவும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் சிறப்பு அதிதியாகவும் கலந்து போட்டியை ஆரம்பித்து வைத்தனர். இந்த ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி தனஞ்சயன் மற்றும் போட்டி இணைப்பாளர் பொறியியலாளர் சுஜாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இப் போட்டிகள் 6, 8, 10, 12, 14 மற்றும் 19 வயதுக்கு கீழ் ஆகிய பிரிவுகளில் ஆண், பெண் தனித்தனியான பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. முதற்தடவையாக நடாத்தப்படும் இப்போட்டியில் சுமார் 800 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

இப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர்.

போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களிற்குப் பணப்பரிசு, வெற்றிக்கிண்ணம், தங்கப்பதக்கம், வெற்றிச்சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெறுவோருக்கு பதக்கங்களும் வெற்றிச்சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் போட்டியின் சகல சுற்றுக்களிலும் முழுமையாகப் பங்குபற்றுபவர்களுக்கு பங்குபற்றுதல் சான்றிதழ்கள் வழங்கப்படும்

மேலும் அதிக வீதமான மாணவர்கள் பங்குபற்றும் முதல் மூன்று பாடசாலைகளுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு பேரணி

**(கி.வசந்தன்)**

உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியா பல்கலைக் கழகத்தின் முயற்சியாண்மைக் கற்கைகள் பிரிவின் மாணவர்கள் இணைந்து நேற்று விழிப்புணர்வுப் பேரணி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இலங்கையின் முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாடு இலங்கைக்கு முக்கியமான ஒரு விடயமாக கருத்தில் கொண்டு உலக முயற்சியாளர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாகவும் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழகத்தில் புத்தாக்கம் வர்த்தக கண்காட்சி மற்றும் வர்த்தக செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெறுகின்ற நிலையில் அதனை ஒட்டியும் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பூங்கா வீதியில் உள்ள வெளிவாரிகள் கற்கைகள் பிரிவில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் வவுனியா நகர் வழியாக சென்று மீண்டும் வெளிவாரி கற்கைகள் பீடத்தை வந்தடைந்திருந்தது.

இதில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அ.அற்புதராஜா, வியாபாரக் கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தேவைகள் இருந்தும் ஆதனவரியை எட்டு வீதமாகக் குறைத்துள்ளோம்!

## வவுனியா மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு



**(கி.வசந்தன்)**

மாநகரில் பல்வேறு தேவைகள் இருந்தும் ஆதன வரியை 8 வீதமாக குறைத்துள்ளனர் என வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சபையின் ஆதனவரி 15 வீதத்தில் இருந்த நிலையில் நாம் சபையை பொறுப்பெடுத்த பின்னர் அதனை 8 வீதமாக குறைத்துள்ளோம். இது தொடர்பாக எனது மாநகர மக்களுக்கு சில தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டிய தேவை உள்ளது.

இந்த ஆதன வரியை 8 வீதத்தை விட இன்னும் குறைக்க முடியும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்குமான சம்பளத்தின் 40 வீதமான பெறுமதியை அந்தந்த சபைகளே வழங்க வேண்டும். எதிர்வரும் வருடங்களில் அதன் 100 சதவீதத்தையும் சபைகளே வழங்க வேண்டிய நிலை உள்ளது.

இதனால் பாரியளவிலான நிதி அதற்கு ஒதுக்க வேண்டும். அத்துடன் வவுனியா மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டாலும் கிராமப் புறங்களில் உள்ள பல வீதிகள் குண்டும் குழியுமாகவே உள்ளது.

ஒரு கிலோ மீற்றர் தார் வீதி அமைப்பதற்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபா தேவை. காப்பற் வீதிக்கு ரூபா 20 மில்லியனும், அதே அளவிலான வடிகால் அமைப்பதற்கு ரூபா 40 மில்லியனும் செலவளிக்க வேண்டும். இப்படி பல தேவைகள் மாநகரில் உள்ளன. சபையின் சொத்துக்களைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

தற்போது எமது சம்பளத்தை விடுத்து ஒரு வட்டாரத்திற்கு அண்ணளவாக ரூபா 5 மில்லியனை மாத்திரமே ஒதுக்கக் கூடிய நிதி வளமே தற்போது உள்ளது. மாநகரின் பொதுத்தேவைகளுக்காக பாரிய அளவிலான நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. நிலமை இப்படி இருந்தும் 15 வீதமாக இருந்தஆதன வரியினை நாங்கள் அரைவாசியாகக் குறைத்துள்ளோம்.

வரி மதிப்பீட்டு பணிகள் வருடா வருடம் ஒழுங்கு முறையாக செய்யப்படாமையினாலே மக்கள் மீது இந்த வரிச்சுமை சடுதியாக அதிகரித்துள்ளது. – என்றார்.





# கன்னியாவில் ஆடிச் செவ்வாய் பூஜையில் நாகம்மாள் நேரில் பிரசன்னமாகிக் காட்சி



(கஜானா சந்திரபோஸ்)

திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீஆதி கருமாரி அம்மன் ஆலயத்தில் அம்பிக்கைதாசன் அருள்வாக்கு சித்தரின் ஆடி செவ்வாய் பூஜையில் அம்பாள் திருவுருவத்தின் மீது நாகம்மாள் காட்சி தருவதையும் பக்தர்கள் தரிசிக்கின்றமையையும் காணலாம்.

# திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலய தீமிதிப்பு!









(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில் தீமிதிப்பு பக்திபூர்வமாக நடந்தேறியது.

இதன்போது மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு தீமிதித்தம்சியைக் காணமுடிந்தது.

இவ்வாலய உற்சவம் கடந்த 08.08.2025 வெள்ளிக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, நேற்று முன்தினம் இடம்பெற்ற தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. கூட்டணிக்கு எதிரான சதி திட்டங்கள் நிறைவேறா!

## மு.க.ஸ்டாலின் உறுதி



“ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் தி.மு.க. கூட்டணியை விரும்பவில்லை. அதனால், நம்மிடையே பிளவு ஏற்படுத்த நினைக்கின்றனர். அவர்களது சதி திட்டங்கள் ஒருபோதும் நிறைவேறாது.”

– இவ்வாறு இந்திய கொம்யூனிஸ்ட் மாநில மாநாட்டில், முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று சனிக்கிழமை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26 ஆவது மாநில மாநாட்டில் தமிழக முதல்வர் ஸ்டாலின் மேலும் உரையாற்றுகையில்,

“எல்லோருக்கும் எல்லாம் என்ற லட்சியத்துடன் திராவிட இயக்கங்களோடு கொம்யூனிஸ்டுகள் கொள்கை உறவு கொண்டுள்ளன. இந்தக் கொள்கை உறவு எப்போதும் நீடிக்க வேண்டும். அப்போதுதான் தலைமுறைகள் காப்பாற்றப்படும்.

சேலம் சிறையில் 22 கைதிகள் 1950 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த நாளை கண்டன நாளாக அறிவித்த பெரியார், ஊரடங்கு ஊர்வலங்களை நடத்தினார். அங்கு கொம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை ஏற்று மணி மண்டபம் அமைக்கப்படும்.

தி.மு.க. தோழமைக் கட்சிகளின் ஒற்றுமை, பலரின் கண்களை உறுத்துகிறது. இந்தக் கூட்டணியை உடைக்க எத்தனையோ சதிச் செயல்களையும், பொய்ச் செய்திகளையும் பரப்பப்புகின்றனர். அதில் முக்கியமானவர் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. அவருக்கு கொம்யூனிஸ்ட் கட்சிகளின் மேல் குபீர் பாசம் பொங்குகிறது.

அடிமைத்தனம் பற்றி பழனிசாமி பேசலாமா? எங்களைப் பொறுத்தவரை யாரும் யாருக்கும் அடிமை இல்லை. எங்களது இயக்கம் அடிமைத்தனத்துக்கு எதிரானது. அந்தக் கொள்கை தெரியாமல் பழனிசாமி கொச்சைப்படுத்தி பேசுகிறார். கம்யூனிஸ்ட் தலைவர்களை விட, திருமாவளவனை விட , எடப்பாடி என்ன தியாகம் செய்துவிட்டார்? அவர் நிரூபிக்க முடியுமா? மக்கள் பிரச்சனைக்காக போராடும் இயக்கங்களை புழுதி வாரி தூற்றுகிறார்.

கூட்டணியில் இருந்தாலும் நியாயமான கோரிக்கைகளை வைக்க கொம்யூனிஸ்டுகள் தவறுவதில்லை. நாங்களும், அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறோம். இதுதான் ஜனநாயகம். அதனால்தான் தோழமை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரை வகுப்புவாதம், மேலாதிக்கம், எதேச்சதிகாரம் ஆகியவற்றுக்கு எதிராக ஜனநாயக சக்திகள் ஒற்றுமையாக போராட வேண்டும். எங்கள் லட்சியம் பெரிது, அந்த லட்சியத்துக்காகத்தான் எல்லோரும் போராடி வருகிறோம். ஆனால், ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் நம்முடைய கூட்டணியை விரும்பவில்லை. அதனால், நம் மிடையே பிளவு ஏற்படுத்த நினைக்கின்றனர். அவர்களது சதி திட்டங்கள் ஒருபோதும் நிறைவேறாது.

ஜனநாயகம்தான் இறுதியில் வெல்லும். அதை வெல்ல வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு உள்ளது. ஜனநாயகத்துக்கு அடிப்படையான தேர்தல் ஆணையத்தை பா.ஜ.க. தனது கிளை அமைப்பாக மாற்றிவிட்டது. தேர்தல் ஆணையர்கள் நியமனத்தில்தான் சதி செய்கிறார்கள் என்று பார்த்தால், வாக்காளர் பட்டியலிலும் சதி செய்துள்ளனர். மக்களாட்சியை பாதுகாத்த இந்த சதித்திட்டத்தை அம்பலப் படுத்திய ராகுல் காந்திக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் உட்பட பிற மாநிலங்களில் தேர்தல் நடைமுறைகள் தொடங்குவதற்கு முன்பாக, சுதந்திரமான நேர்மையான முறையில் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.

பா.ஜ.கவை பற்றி தி.மு.க. சொன்னதெல்லாம் நடந்து வருகிறது. சமஸ்கிருதத்துக்கு முக்கியத்துவம், குருகுலத்தில் படித்தவர்களுக்கு ஐ.ஐ.டியில் பணி, சுதந்திர தின விழாவில் ஆர்.எஸ்.எஸ். பற்றி புகழ்ந்து பேசியது, அரசு விளம்பரங்களில் சாவர்க்கர் படம் என அவல நிலை ஏற்பட்டுள்ளது.

உறவினர் வீட்டில் அமுலாக்கத் துறை ரெய்டு என்றால், ஓடிவந்து கூட்டணியில் சேர்வதற்கு நாங்கள் என்ன பழனிசாமியா? எங்களை மிரட்ட நினைப்பவர்கள், இன்று மிரண்டு போயிருக்கிறார்கள்.” என்றார்.

# சீன வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் இந்தியா விஜயம்



எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடன் பேச்சுவார்த்தை நடத்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சராகவும், சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினராகவும் இருக்கும் வாங் யி, அஜித் தோவலின் அழைப்பின் பேரில் ஓகஸ்ட் 18-19 திகதிகளில் இந்தியா செல்கிறார். அவர் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரையும் சந்திப்பார் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில், “வாங் தனது பயணத்தின் போது, இந்திய – சீன எல்லைப் பிரச்சினை குறித்த சிறப்பு பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் 24 ஆவது சுற்றில் இந்தியாவின் சிறப்பு பிரதிநிதி அஜித் தோவலுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்.” என்று கூறப்பட்டுள்ளது.

எல்லை வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவது உட்பட, இரு நாட்டு எல்லையில் அமைதியை வலுப்படுத்துவதற்கான பல நம்பிக்கைகளை வளர்க்கும் விஷயங்களை இந்த பேச்சுவார்த்தையின் போது இரு நாட்டு சிறப்பு பிரதிநிதிகளும் பரிசீலிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவுடனான உறவில் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில், சீனாவின் முக்கிய தலைவர்களுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்துவது சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.







# பாகிஸ்தானில் திடீர் வெள்ளம் 300 இற்கு மேற்பட்டோர் பலி

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பெய்த திடீர் அடைமழை காரணமாக 13 குழந்தைகள் உட்பட 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக கைபர் பக்துன்க்வா மாகாண பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் ஃபைசி குறிப்பிடுகையில்,

“கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் பஜோர், புனேர், ஸ்வாட், மனேஹ்ரா, ஷாங்லா, டோர்கர், படாகிராம் மாவட்டங்களில் கடந்த 48 மணி நேரத்தில் மிக அதிக கனமழை பெய்தது. மேக வெடிப்புகளால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 307 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில், 279 பேர் ஆண்கள், 15 பேர் பெண்கள், 13 பேர் குழந்தைகள். 23 பேர் காயமடைந்துள்ளனர்.

புனேர் நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு 184 பேர் உயிரிழந்துள்ளனர். ஷாங்லாவில் 36 பேரும், மன்சேராவில் 23 பேரும், ஸ்வாட்டில் 22 பேரும், பஜோரில் 21 பேரும், பட்டாகிராமில் 15 பேரும் உயிரிழந்துள்ளனர். அபோட்டாபாத்தில் ஒரு குழந்தை நீரில் மூழ்கி இறந்துள்ளது. இதுவரை 74 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றில், 11 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைபர் பக்துன்க்வா முதல்வர் அலி அமின் கந்தாபூரின் உத்தரவின் பேரில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்துமாறு முதல்வர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வானிலை முன்னெச்சரிக்கைத் தகவல்களை அறிந்து முடிவுகளை எடுக்குமாறு சுற்றுலாப் பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மழை வெள்ளத்தால் பலர் காணாமல் போயுள்ளனர். எனவே, உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும்” என்று தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை நாளை சந்திக்கிறார் டொனால்ட் ட்ரம்ப்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உடனான சந்திப்பை அடுத்து, நாளை திங்கட்கிழமை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்திக்க உள்ளார்.

இது தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில்,

“அலாஸ்காவில் நிகழ்ந்த சந்திப்பு சிறப்பானது, வெற்றிகரமானது. ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான சந்திப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, மிகுந்த மதிப்புக்குரிய நேடோ பொதுச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய தலைவர்களுடன் நேற்றிரவு தொலைபேசியில் பேசினேன்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான கொடூரமான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சிறந்த வழி, நேரடியாக அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதுதான் என்று அனைவராலும் தீர்மானிக்கப்பட்டது. இது போரை (தற்காலிகமாக) முடிவுக்குக் கொண்டு வரும் வெறும் போர் நிறுத்த ஒப்பந்தம் அல்ல. அவ்வாறு ஒன்று நடந்தால் அது நிலைக்காது. ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நாளை திங்கள் கிழமை மதியம் வெள்ளை மாளிகைக்கு வருவார்.

அனைத்தும் சரியாக நடந்தால், நாங்கள் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ஒரு சந்திப்புக்கு திட்டமிடுவோம். இது நிகழ்ந்தால் பல லட்சக்கணக்கான மக்களின் உயிர்கள் காப்பாற்றப்படும்.” என தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -17.08.2025




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன் முடிக்க இயலும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் சில மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சொத்துகள் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் உடல் நலம் சிறப்பாக இருக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் தாமதமாக கிடைக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று மகிழ்சிகரமான நாளாக காணப்படாது. இன்று அதிகமான எதிர்பார்ப்பு கூடாது.

அதிகமான பணிகள் கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க தவறுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைக்க இனிமையான வார்த்தைகளை பேசுங்கள்.

நிதிநிலைமை அதிருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் நிதி தேவைகளை சௌகரியமாக கையாளும் சூழ்நிலை இன்று இருக்காது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்.




இன்று உங்கள் செயல்களை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டியது அவசியம். இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பரம்மரிக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் மிதமாக இருக்கும். கால்களில் வலி மற்றும் விறைப்புத்தன்மை ஏற்படலாம். இதனால் கவலை ஏற்படும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதிநிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் எதிர்காலத்துக்காக உங்களை முன்னேற்றிக் கொள்ளும் வழி வகைகள் கிடைக்கும். எதிர்மறையான போக்கை தவிர்ப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலைகளை தவிர்க்க உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது சர்ச்சைக்குரிய விஷயங்களை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

பதற்றம் காரணமாக உங்கள் கால்களில் வலி ஏற்படலாம். அமைதியாக இருப்பதும் தியானம் மேற்கொள்வதும் சிறந்தது.




இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை தரும் எண்ணங்களை தவிர்த்து நேர்மறையாக எண்ணினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று உறுதியான மனநிலையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தால் தடைகளை சமாளித்து பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும்.

சில குடும்ப பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் இருவரிடையே கருத்து வேற்பாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் கிடையாது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படலாம்.




இன்று உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த பிரார்தனை மேற்கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். கூடுதல் பணிச்சுமைகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். சிறந்த பலனைக் காண நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது சிறிது பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மேற்கொள்வதன் மூலம் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாகக் கையாள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுபடுத்தும்.

நீங்கள் பங்குகளில் செலுத்தும் பணம் லாபத்தை அளிக்கும். எதிர்பாராத பண வரவிற்கு சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -17.08.2025




இன்று மிகவும் சாதகமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை மூலம் நெருக்கமானவர்களின் இதயத் தில் இடம் பிடிப்பீர்கள். நம்பிக்கை யுடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்து சூழ்நிலை உங்க ளுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களால் பாராட்டப்படும்.

உங்கள் காதலரை இன்று மாலை சந்த்தித்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையை மகிழ் விக்கலாம்.

இன்று பண வரவு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கி யத்தில் எந்தவிதமான குறைபாடும் இருக்காது.




இன்று சவாலான சூழ்நிலை களை சந்திக்க நேரும். திரைப் படம் பார்த்தல் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழ் நிலை காணப்படும். சில சமயங் களில் உங்கள் பொறுமையை இழப்பீர்கள். உங்களின் நாணயம் சந்தேகிக்கப்படலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். சகஜமாக நடந்து கொள்வது நல்லது.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சிகரமாக இருக் காது. கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று செலவு கள் ஏற்படும்.

கால் வலி மற்றும் தலிவலி ஏற்பட வாய்ப்புள் ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களிடம் அமைதி யின்மை காணப்படும். ஆன்மீகத் தில் ஈடுபடுவதன் மூலம் இந்த சூழ் நிலையை நீங்கள் சமாளிக்க லாம். உங்கள் எதிர்கால வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக இயற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ள வேண் டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவை யில்லாத செலவினங்கள் ஏற்படும். கவனமாக திட்ட மிடவும்.

ஒவ்வாமை காரணமாக சளி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




அனுசரித்து விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். தியானம் அல்லது பிரார்த்தனை செய்வதற்கு இன்றைய நாள் ஏற்றது.

உங்கள் செயல் திறனுக்கு விமர் சன ரீதியான பாராட்டுக்கள் கிடைக்கும். உங்களின் சிறப்பான தகுதிகளை வெளிக்கொணர்ந்து வெற்றி பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக் கலாம்.

உங்கள் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங் கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள் வீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத் தும்.

நீங்கள் திடமாக காணப்படுவீர்கள். இது உங்க ளுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கும்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01ஆம் திக தியில் இருந்து ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 14 லட்சத்து 67 ஆயிரத்து 694 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இவ்வாண்டின் ஒகஸ்ட் மாதத்தின் முதல் 13 நாள்களில் 99,406 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த 13 நாள்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்க ளின் மொத்த எண்ணிக்கை 19,572 ஆகும்.

மேலும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10,970 சுற்றுலாப் பயணிகளும், இத்தாலியிலிருந்து 7,641 சுற்றுலாப் பயணி களும், பிரான்ஸிலிருந்து 6,870 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 6,762 சுற்றுலாப் பயணிகளும், ஜேர் மனியிலிருந்து 5,877 சுற்றுலாப் பயணிகளும் வந்துள்ள னர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.